# 07

# "ஜுமுஆ" தொழுகை



வெள்ளிக்கிழமையை 'யவ்முல் ஜுமுஆ' என அழைப்போம். 'ஜுமுஆ' எனும் அறபுச் சொல்லின் கருத்து 'ஒன்றுகூடுதல்' என்பதாகும். அந்நாளில் சக்தியுள்ள, முஸ்லிமான ஆண்கள் யாவரும் ஊரிலுள்ள பள்ளிவாசலில் ஒன்றுகூடுவதால் இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது எனலாம்.

அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்துக்கும் வெவ்வேறு தினங்களை சிறப்பான தினங்களாக ஆக்கி வைத்துள்ளான். முஹம்மத் ﷺ அவர்களின் உம்மத்தவருக்கு வெள்ளிக்கிழமையை விசேட தினமாக ஆக்கி அருள் புரிந்துள்ளான்.

ஆதலால் ஜுமுஆத் தினத்தில் முஸ்லிம்கள் யாவரும் தத்தமது ஊரிலுள்ள பள்ளிவாசலில் ஒன்று சேர்ந்து லுஹர் தொழுகைக்குப் பதிலாக வெள்ளிக்கிழமைகளில் நிகழ்த்தப்படும் இரு குத்பாக்களையும் செவிமடுப்பதும் தொடர்ந்து, ஜுமுஆத் தொழுகையை நிறைவேற்றுவதும் அன்றைய பிரதான கடமையாகும். இக்கடமை குறித்து அல்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا نُودِيَ لِلصَّلَوٰةِ مِن يَوۡمِ ٱلۡجُمُعَةِ
فَٱسۡعَوۡاْ إِلَىٰ ذِكۡرِ ٱللَّهِ وَذَرُواْ ٱلۡبَيۡعَۚ ذَٰلِكُمۡ خَيۡرٞ لَّكُمۡ إِن كُنتُمۡ
تَعۡلَمُونَ ٩

‘‘ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ நாளில் தொழுகைக்காக (அதான் சொல்லி) அழைக்கப்பட்டால் அல்லாஹ்வைத் தியானிப்பதற்காக (விரைந்து) செல்லுங்கள். (தொழில்) வியாபாரங்களை விட்டுவிடுங்கள். நீங்கள் அறிவுடையோராயின் அது உங்களுக்குச் சிறந்ததாகும்’’ (அல்குர்ஆன் 62:9).

ஜுமுஆத்தொழுகையைத் தவற விடுவது குறித்து முஹம்மத் ﷺ அவர்கள் பின்வருமாறு எச்சரித்துள்ளார்கள். ‘‘சில(கூட்டத்தவ)ர் ஜுமுஆக்களைத் தவற விட விரும்புகின்றனர். (இதனால்) அல்லாஹ் அவர்களது உள்ளங்கள் மீது முத்திரையிட்டு விடுவான். பின்னர் அவர்கள் மறதியாளர்களாக ஆகிவிடுவர்’’ (முஸ்லிம்).

## ஜுமுஆத் தினத்தின் ஸுன்னத்துக்களை நிறைவேற்றுவோம்

✶ **குளிப்போம்:**

‘‘பருவ வயதையடைந்த ஒவ்வொருவரும் ஜுமுஆத் தினத்தில் குளிப்பது மேலானதாகும்’’ (புஹாரி, முஸ்லிம்)

✶ **நல்லாடை அணிந்து நறுமணம் பூசுவோம்:**

‘‘ஒவ்வொரு முஸ்லிம் மீதும் ஜுமுஆ நாளில் குளிப்பதும், ஆடைகளில் நல்லதை அணிவதும், நறுமணமிருந்தால் அதனைப் பூசிக் கொள்வதும் சிறந்ததாகும்.’’ (அஹ்மத்)

✶ **நேரகாலத்துடன் பள்ளிக்குச் செல்வோம்:**

‘‘யார் ஜுமுஆத் தினத்தில் குளித்து ஆரம்ப நேரத்தில் (பள்ளிக்குச்) செல்கிறாரோ அவர் ஓர் ஒட்டகையை தர்மம் செய்தவரைப் போலாவார். இரண்டாவது நேரத்தில் செல்பவர் ஒரு மாட்டை தர்மம் செய்தவரைப் போலாவார். மூன்றாவது நேரத்தில் செல்பவர் கொம்புள்ள ஓர் ஆட்டை தர்மம் செய்தவரைப் போலாவார். நான்காவது நேரத்தில் செல்பவர் ஒரு கோழியை தர்மம் செய்தவரைப் போலாவார். ஐந்தாவது நேரத்தில் செல்பவர் ஒரு முட்டையை தர்மம் செய்தவரைப் போலாவார். இமாம் (குத்பா ஓத) ஆரம்பித்து விட்டால் மலாஇகாமார்கள் உபதேசத்தை செவிமடுக்க வந்துவிடுவர்’’ (முவத்தா)

✶ **தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுவோம்:**

‘‘பள்ளிக்குள் மற்றவர்களுக்கு இடைஞ்சலில்லாமல் இருந்து (ஸஃப்பில்) இருவருக்கிடையில் பிரிந்துவிடாது தனக்கு விதியானதைத் தொழுது இமாம் உரையாற்றும்போது நன்கு செவிமடுத்தால், அவர் பெரும் பாவங்களைத் தவிர்க்கும் வரை இந்த ஜுமுஆவுக்கும் அடுத்த ஜுமுஆவுக்கும் இடையிலான பாவங்கள் மன்னிக்கப்படும்’’ (புஹாரி).

✶ **பேசுவதைத் தவிர்ப்போம்:**

‘‘ஜுமுஆ தினத்தில் இமாம் குத்பா ஓதும்போது உமது நண்பனிடம் ‘மௌனமாயிரு’ என்று கூறினாலும் (உமது குத்பாவின் பயனை) வீணாக்கிவிட்டீர்’’ (முஸ்லிம்).

✶ **‘ஸூரதுல் கஹ்பு’ ஓதுவோம்:**

‘‘ஜுமுஆத் தினத்தில் ஸூரதுல் கஹ்பை ஓதுபவருக்காக இரு ஜுமுஆக்களுக்கிடையில் ஒளி பிரகாசிக்கும்’’ (ஹாகிம்).

✶ **முஹம்மத் r அவர்கள் மீது அதிகம் ஸலவாத் சொல்வோம்:**

‘‘ஜுமுஆ தினத்தின் பகலிலும் இரவிலும் என் மீது அதிகமாக ஸலவாத் சொல்லுங்கள். யார் இதைச் செய்கிறாரோ அவருக்கு நான் சாட்சியாகவும் மறுமைநாளில் சிபாரிசு செய்பவனாகவும் இருப்பேன்’’ (பைஹகி).

✶ **அதிகம் துஆ கேட்போம்:**

‘‘நிச்சயமாக வெள்ளிக் கிழமை நாளில் ஒரு நேரமிருக்கிறது. அதில் முஸ்லிமான அடியான் கண்ணியமும் மகிமையும் மிக்க அல்லாஹ்விடம் நல்லதைக் கேட்டால் அதனைக் கொடுக்காது விடுவதில்லை’’ (முஸ்லிம்).

ஜுமுஆ குத்பா முஸ்லிம் சமூகத்துக்கு அல்லாஹ் வழங்கிய மாபெரும் அருட்கொடையாகும். குறித்த நேரத்தில் உலகிலுள்ள அனைத்து முஸ்லிம் ஆண்களும் ஒரே இடத்தில் ஒன்று கூடுவது சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க அவர்கள் தயார்படுத்தப்படுவதாக அமைகின்றது. சிலர் இதைப் புரிந்து கொள்வதில்லை. இதனால் உரிய நேரத்திற்கு சமூகமளிப்பதில்லை. அவ்வாறு சமூகமளித்தாலும் பள்ளிக்கு வெளியே நின்று கதைத்துக் கொண்டு நேரத்தைக் கடத்துவர். இது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

நாம் இவற்றைத் தவிர்ப்போம். ஜுமுஆவிற்கு நேர காலத்துடன் செல்வோம்,
உச்ச பயன்களைப் பெறுவோம்.

**செயற்பாடு:**

1. ஜுமுஆ நாளின் உச்சப் பயனைப் பெறுவதற்காக ஒரு முஸ்லிம் எவ்வாறு செயற்படுவார் என்பதை அட்டவணைப்படுத்துக.
2. ஒரு மாத காலத்துக்குள் நீங்கள் செவிமடுத்த வாராந்த குத்பாக்களின் சுருக்கத்தைப் பதிவுப் புத்தகமொன்றில் எழுதி ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.